பக்கங்கள்: 10
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 13 ஞாயிற்றுக்கிழமை 27.06.2021 கதிர் 100

## 6 மாதக் குழந்தைக்கும் தும்பளையில் தொற்று

வடமராட்சி தும்பளை தெற்குப் பகுதியில் 6 மாதக்குழந்தை மற்றும் 9 வயதுச்சிறுவனுக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சளி காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காகச் சென்ற 13 வயதுச் சிறுமிக்கும் தொற்று

2

# ஜனாதிபதியின் உரையில் கல்வி நிலைமை தொடர்பில் முற்றிலும் தவறான, உண்மைக்கு மாறான தகவல்கள்

## போட்டுத் தாக்குகின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஜூன் 27

கல்வி தொடர்பில் ஜனாதிபதியின் பேச்சு பொறுப்பற்ற வகையில் அமைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டியுள்ளது.

ஜனாதிபதி நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

அறுபது வீதப் பாடசாலை மாணவர்களின் கல்வி இழக்கப்பட்ட நிலையில் தொலைதூர இணைய வழி கற்றலூடாக பாரிய முன்னேற்றத்தை அடைந்து உள்ளோம் என்ற ஜனாதிபதியின் கூற்று, மாணவர்கள் நலனில் அரசாங்கம் காட்டும் பொறுப்பற்ற தன்மையை உறுதி செய்கின்றது. கொவிட்19 தொற்றினால் ஒரு வருடம் மூன்று மாதத்திற்கும் அதிகமாக பாடசாலைகள் மூடியுள்ள சூழலில், மாணவர்களின் கல்வி முற்றாக செயலிழந்த

2





# தமிழ்க் கட்சிகளை இணைக்கும் இன்றைய கூட்டம் ஒத்திவைப்பு

## தொடர் முயற்சியில் ரெலோ முனைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழ்த் தேசியக் கட்சிகள், அமைப்புகளை ஒன்றிணைத்துச் செயற்பட வைப்பதற்கான முன் முயற்சியாகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடையே இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு சூம் முறையில் நடத்தப்படவிருந்த கலந்துரையாடல் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த முயற்சியைத் தளர விடாது முன்னெடுப்பதில் ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் அவரது கட்சிப் பிரமுகர்களும் தீவிரமாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2

## ஏனைய அரசியல் கைதிகளும் விரைவில் விடுதலையாவார்கள்!

### அரசு தமிழரை ஏமாற்றாது என்கிறார் தினேஷ்

கொழும்பு, ஜூன் 27

கடந்த நல்லாட்சி அரசுதான் தமிழ் மக்களை ஏமாற்றி ஆட்சி நடத்தியது. கோட்டாபய அரசு ஒரு போதும் தமிழ் மக்களை ஏமாற்றாது; தமிழ் மக்களை வைத்து அரசியல் நடத்தாது. தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அரசு அதீத அக்கறை கொண்டுள்ளது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மரணதண்டனைக்கைதிதுமிந்த சில்வாவைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ததை மூடி மறைப்பதற்காகவே தமிழ் அரசியல் கைதிகளில் 16 பேரை ஜனாதிபதி விடுதலை செய்தார் என்று எதிரணியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை அரசு அடியோடு நிராகரிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

## பத்து நாள்களில் 531 பேரை காவு கொண்ட கொரோனா!

இலங்கையில் கடந்த 10 நாள்களில் 531 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று தேசிய தொற்றுநோய் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 16ஆம் திகதியிலிருந்து 25ஆம் திகதி வரை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்திய தினசரி கொரோனா மரணங்களின் அறிக்கைகளுக்கு அமைவாக இந்த எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக கடந்த 10 நாள்களில் 229 பெண்களும், 302 ஆண்களும் கொரோனாத் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

அவர்களில் 30 வயதுக்கு உட்பட்ட 9 பேர் மரணமடைந்துள்ளனர். அதேவேளை,

2

## செல்லப் பிராணிகளிடமும் கொரோனா வைரஸ் பதிவு



வெளவால்கள் மட்டும் அன்றி நாய்கள், பூனைகள் மற்றும் கோழிகளிடம் இருந்தும் கொரோனா வைரஸ் பதிவாகி உள்ளதாக அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்றுத் தெரிவித்தது.

கொரோனா வைரஸ் 1960 களில் விலங்குகளில் பதிவாகி இருந்தது.

2

## அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் நாமலைச் சந்தித்தனர்

### தந்தையை விடுவித்துத் தருமாறு கோரினர்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

அரசியல் கைதியான ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை இன்று சந்தித்தனர்.

வடமராட்சியின் முள்ளி பகுதியில் இடம்பெற்ற சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை திறப்பு விழாவிற்கு வந்தபோதே நாமல் ராஜபக்ஷவை

2

Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Engineering Diplpma holders in HNDA, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கை மீனவருக்கு வாழ்வாதார உதவி இந்தியாவிடம் கோரும் அமைச்சர் டக்ளஸ்

பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள இலங்கைக் கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார ஒத்துழைப்புக்களை இந்தியா வழங்க வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிற்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பேர்ள் எக்ஸ்பிரஸ் கப்பல் விபத்து மற்றும் கொரோனா முடக்கம் போன்றவற்றினால் நாடளாவிய ரீதியில் கடற்றொழில் செயற்பாடுகளும் கடற்றொழிலாளர்களும் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பாக கடற்றொழில் அமைச்சரினால் இந்தியத் தூதுவரிற்கு எடுத்துக் கூறப்பட்டது.

மேலும், கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள வாழ்வாதார சவால்கள் தொடர்பாக இதன்போது தெளிவுபடுத்திய கடற்றொழில் அமைச்சர், வாழ்வாதார சவால்களை எதிர்கொள்வதற்கான ஒத்துழைப்பினை இந்தியாவிடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இந்தியா விரைந்து உதவுவதை நன்றியுடன் நினைவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழிலாளர்களுக்கும் இந்தியாவின் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.



இதுதொடர்பாக கருத்து தெரிவித்த இந்தியத் தூதுவர், தமது வெளியுறவு அதிகாரிகளுடன் கலந்துரையாடி சாதகமான முடிவுகளைத் தெரிவிப்பதாக கடற்றொழில் அமைச்சரிடம் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சேதனக் குப்பைகளை உரமாக மாற்றும் தொழிற்சாலை இன்று முள்ளியில் திறந்து வைத்தார் அமைச்சர் நாமல்

**(கலையமுதன்)**

யாழ்ப்பாணம்,ஜூன் 27

யாழ்ப்பாணம் வடமராட்சி முள்ளியில் சுமார் 23 கோடி ரூபா பெறுமதியான சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை இன்று விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் உதவி மூலம் உருவாக்கப்பட்ட இந்த தொழிற்சாலையால் ஒரு நாளைக்கு ஐம்பதாயிரம் கிலோ உரத்தை உருவாக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி பிரதேச சபையின் ஆளுகைக்குள் காணப்படும் இந்த தொழிற்சாலை மூலம் பிரதேச சபைகளின் குப்பை பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் 9 மாகாணத்துக்கும் ஒரு திட்டம் வழங்கப்பட்ட நிலையில் வட மாகாணத்துக்கான திட்டம் கரவெட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, உள்ளூராட்சி அமைச்சர் ரொஷான் ரணசிங்க, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன்,யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதியின் உரையில் கல்வி நிலை தொடர்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் உள்ளது.

ஆசிரியர்கள் சுயமாக தமது நிதியை பயன்படுத்தி கற்பித்தலில் ஈடுபட்டு, பகுதி அளவிலேனும் கல்வியை இடைவெளியில்லாது தொடர்கின்றனர்.

எனினும், எவ்வித கல்வி செயற்பாடுகளும் இன்றி இவ் அச்சுறுத்தலில் சிக்கித் தவிக்கும் 43 லட்சம் மாணவர்கள் தொடர்பாக எவ்விதமான வேலைத் திட்டங்களும் அரசினால் முன்னெடுக்கப்படாமை துரதிஷ்டவசமே.

அறுபது வீதமான மாணவர்களுக்கு இணையவழி நிகழ்நிலை ஊடான கற்றல் வாய்ப்புகள் சாத்தியமற்று காணப்படுகின்றன. இவ்வாறான ஓர் இக்கட்டான நிலையில் 2021.06.25 அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பாடசாலைகள் மூடியிருந்தாலும் தொலைதூர இணைய வழிகளின் ஊடாக நிலைபேறுடைய கல்வியினை வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையாகப் பெற்றோர், கல்விச் சமூகம், மாணவர்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்த - நிலை குலைந்துள்ள கல்வியினை மீட்டு மேலே கொண்டு வருவதற்கான - அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டம் என்ன என்பது குறித்து அவர் குறிப்பிடவில்லை. அவரின் இந்த மௌனம் கல்விச் சமூகத்திற்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் பத்தாயிரம் பாடசாலைகளுக்குத் தேவையான fiber, optical போன்ற நவீன வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளமையானது எந்தளவு நம்பகத்தன்மை வாய்ந்தது எனக் குறிப்பிட முடியாதுள்ளது.

இலங்கையில் மொத்த பாடசாலைகள் 10 ஆயிரத்து 165. அவர் கூறிய பத்தாயிரம் பாடசாலைகள் எங்கு அமைந்துள்ளன என்பது சர்ச்சைக்குரியதாக உள்ளது.

எது எப்படியோ, கல்வி அமைச்சின் புள்ளி விவரப்படி இணைய வீச்சு இல்லாத பாடசாலைகள், பிரதேசத்திற்கு 2,000ற்கும் அதிகமாகும். நவீன தொடர்பு சாதனங்களின் ஊடாக பாடசாலைகள் புதுப்பிக்கப்பட்டிருந்தால் மாணவர்கள் மலை முகடுகளிலும் மரத்தின் மேலேயும் ஏறி ஆபத்தான சூழ்நிலையில் கல்வியைப் பெறுவதற்காக தினமும் போராட்டத் தேவையில்லை. அதை அனுபவிக்கும் பெற்றோருக்கு ஜனாதிபதியின் கூற்று நகைப்பிற்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

கொவிட் 19 ஆல் முழுமையாக ஸ்தம்பித்துள்ள கல்வி தொடர்பாக, போதிய தெளிவினை கல்வி அதிகாரிகள் ஜனாதிபதிக்கு வழங்கவில்லை என்பது புலனாகின்றது. தினமும் பொது வெகுசன ஊடகங்களில் எடுத்துரைக்கப்படும் மாணவர்களின் அவல நிலை உரிய அதிகாரிகளை சென்றடையவில்லை போலும்.

இன்று கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழலை, அரசாங்கம் சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை என்பதும் தெளிவாகின்றது.

மாணவர்களின் கல்விக் கட்டமைப்பை மீள கட்டி எழுப்பக்கூடிய எந்த ஒரு கல்விக் கொள்கையையோ திட்டங்களையோ இன்றுவரை முன்வைக்கவில்லை என்பது மிகவும் துரதிஷ்டமே .

கல்வி அமைச்சர் பன்னிரண்டு வீதமான மாணவர்களுக்கே இலங்கையில் இணையவழிக் கல்வி வாய்ப்பு கிடைக்கவில்லை என குறிப்பிட்டுள்ளமையானது அவர்களுடைய இயலாமையை இது வெளிப்படுத்துகின்றது.

ஜனாதிபதியின் உரையில் - மாணவர்களின் சீருடை, பாடப் புத்தகங்கள், போசாக்குணவு என்பவற்றுக்காக 2500 கோடி ரூபா ஒதுக்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது.

எனினும் 2021 ஆம் ஆண்டுக்கான சீருடைகள் முழுமையாக இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. முதலாவது கொவிட் அலையுடன் போசாக்குணவு இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதுடன், பின்பு அதற்கு பதிலாக உலர் உணவு பொதி வழங்கப்பட்டது.

மீண்டும் பாடசாலை தொடர்ச்சியாக நடைபெறவில்லை. எனினும் இச்செயற்பாட்டிற்கு என்ன நடந்தது என்பது குழப்பமாக உள்ளது. கொவிட் அச்சுறுத்தலின் தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்த பயணத்தடை காரணமாக பலரது சீவனோபாயம் பரிதாபத்திற்குரிய நிலையில், பல குழந்தைகள் பட்டினியால் ஊட்டச்சத்துக் குறைபாட்டுக்குள்ளாகி அல்லலுறுகின்றனர் .இந்த சந் தர்ப்பத்தில் பாடசாலையினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு பொதிகளை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கான எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்க விடயம் ஆகும்.

அரசாங்கமானது மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாக முன்வைக்கும் அனைத்துவிடயங்களும் வார்த்தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டனவாகவே உள்ளன.

கல்வி கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இப் பாரிய சரிவை சீர் செய்வதற்காக எவ்வித தந்திரோபாயமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளாது இருப்பது நீண்டகால பாதிப்பினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திவிடும். ஆயினும், அரசாங்கத்துக்கு கல்வி மற்றும் மாணவர்கள் மீது எந்தவித அக்கறையும் இல்லை என்பதே இதன் ஊடாக தெளிவாகின்றது.- என்று உள்ளது.

## பத்து நாள்களில் 531 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 103 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 419 பேரும் மரணமடைந்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி 71 கொரோனா மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிசெய்யப்பட்டன.

இது நாட்டில் ஒரே நாளில் பதிவான அதிக எண்ணிக்கையிலான மரணங்கள் என்று தேசிய தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

## தமிழ்க் கட்சிகளை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றைய இரு பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் - மாவை சேனாதிராசா (இலங்கைத் தமிழரசு), சித்தார்த்தன் (புளொட்) ஆகிய இருவரும் - கொள்கையளவில் இணங்கியுள்ளனர் என அறிய வந்தது.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன், இக்கூட்டத்தில் பங்குபற்றக் கூடிய ஏனைய தலைவர்கள் குறித்து விவரம் கேட்டுள்ளார் என்றும் -

தமது தமிழ் மக்கள் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிற பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சிறிகாந்தா, அனந்தி சசிதரன் ஆகியோரைப் புறமொதுக்கி இந்த ஏற்பாடு நடக்குமானால் அதில் தம்மால் பங்குபற்ற முடியாது என்றும் -

கூட்ட ஏற்பாட்டாளர்களான ரெலோத் தரப்புக்கு மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்தியுள்ளார் என அறிய வருகின்றது.

தங்கள் கட்சியினதும், தங்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளினதும் பிற தலைவர்களோடு பேசிய பின்னர், பொருத்தமான நேரத்தை ஒதுக்குவதற்கான வாய்ப்புக் குறித்து அறிவிக்க முடியும் என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்துள்ளார் என்றும் தெரியவந்தது.

நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் எழுப்பியுள்ள ஐயங்கள், ஆட்சேபங்களை சுமுகமாகப் பேசித் தீர்த்து, இணக்கத்தை ஏற்படுத்தி, விரைவில் பூர்வாங்கக் கலந்துரையாடலை நடத்தி முடிக்க முடியும் என ரெலோ வட்டாரங்கள் உறுதி தெரிவித்தன.

## செல்லப் பிராணிக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு கொரோனா வைரஸ் பரவியதாக எங்கும் பதிவாகவில்லை. எனவே இந்தச் செய்தியைக் கண்டு மக்கள் அச்சப்படத் தேவையில்லை. இந்தச் செய்திக்காக வீட்டு விலங்குகளை மனிதர்கள் துரத்தத் தேவையில்லை" - என்றார் அவர்.

## அரசியல்கைதி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது தமது தந்தையை விடுதலை செய்து தருமாறு, ஆனந்த சுதாகரின் மகன் கவிரதன், மகள் சங்கீதா ஆகியோர் அமைச்சர் நாமலிடம் கோரிக்கை விடுத்தனர்.

சச்சிதானந்தம் ஆனந்த சுதாகர், 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 9 வருடங்களாக மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவருக்கு 9 வருடங்கள் கழித்து ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.இந்தநிலையில், இவரின் 36 வயதான மனைவி யோகராணி 2018 இல் உயிரிழந்திருந்தார்.

ஆனந்தசுதாகரை மனைவியின் மரணச் சடங்கிற்கு அழைத்து வந்திருந்த போது, அவர் திரும்பிச் சென்ற சமயம் அவரின் மகள் சிறைச்சாலை பஸ்ஸில் தாமும் தந்தையுடன் ஏறிச்செல்ல முயற்சி செய்திருந்தமை பார்த்தவர்களின் மனதை நெருட வைத்திருந்தது.

அதேவேளை ஏனைய அரசியல் கைதிகளின் உறவுகளும், அண்மையில் விடுதலையான அரசியல் கைதிகளும் அமைச்சர் நாமலை இன்று சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## 6 மாதக் குழந்தை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் நேரடித் தொடர்பு கொண்ட குடும்பத்தினருக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் 6 மாதக் குழந்தை மற்றும் 9 வயதுச் சிறுவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஏனைய அரசியல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசு பதவியேற்ற நாள் தொடக்கம் துமிந்த சில்வாவைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு கொழும்பு மாவட்ட மக்கள், ஆளும் கட்சியினர் மட்டுமல்ல எதிரணியினர் கூட ஜனாதிபதியிடம் எழுத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கடந்த ஆட்சியில் அரசியல் அழுத்தம் காரணமாகவே துமிந்த சில்வா மரண தண்டனைக் கைதியானார்.

தண்டனைக்காலம் நிறைவடையவுள்ள நிலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளே விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், இது தமிழர்களை ஏமாற்றும் செயல் என்றும், தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களையும் அரசு அடியோடு நிராகரிக்கின்றது.

கடந்த நல்லாட்சி அரசுதான் தமிழ் மக்களை ஏமாற்றி ஆட்சி நடத்தியது. கோட்டாபய அரசு ஒருபோதும் தமிழ் மக்களை ஏமாற்றாது; தமிழ் மக்களை வைத்து அரசியல் நடத்தாது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அரசு அதீத அக்கறை கொண்டுள்ளது. அதை வெளிப்படுத்தும் முதல் சமிக்ஞையாகவே தமிழ் அரசியல் கைதிகள் 16 பேரை பொதுமன்னிப்பின் கீழ் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார். சிறையிலுள்ள ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்கும் நடவடிக்கையை அரசு முன்னெடுக்கும்.

அதேவேளை, தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கும். எனவே, அரசை தமிழ் மக்கள் நம்ப வேண்டும். - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடுப்பூசிக் கொள்வனவில் கொள்ளை

**கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசு – ஆட்சித் தரப்பு – பண்ணும் குளறுபடிக்கு முடிவில்லைப் போலும்.**

**ராஜபக்ஷக்கள் ஆட்சிப் பீடத்தின் தவறான இராஜதந்திர அணுகுமுறையால் – முறையற்ற சர்வதேச தொடர்பாடல் முறைமைகளினால் – தரமான கொவிட் தடுப்பூசிகளைத் தயாரிக்கும் நாடுகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை இழந்தோம். அயல் நாடான இந்தியா கூட இதுவிடயத்தில் நமக்குத் 'தண்ணி காட்டும்' நிலைமையை நாமே ஏற்படுத்திக் கொண்டோம்.**

**வேறு வழியில்லாமல் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கணக்கில், கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கும் சீனாவை இறைஞ்சும் நிலைமை ஏற்பட்டது.**

**வேறு வகையில்லாமல் – வேறு வழியில்லாமல் – சீனாவிடமிருந்து இந்த ஊசியைப் பெற நடவடிக்கை எடுத்த போது 'தவிச்ச முயல் அடித்த கதையாக' அதைப் பெறுவதிலும் 'சுத்து மாத்து' என்று அதிரடித் தகவல்கள் வெளியாகி பலத்த சர்ச்சைகளைக் கிளப்பின.**

**கோடிக் கணக்கில் – அல்லது பத்துக்கு மேற்பட்ட மில்லியன் கணக்கில் – இந்தத் தடுப்பூசியை சீனாவிடம் கொழும்பு ஆட்சிப் பீடம் 'ஓடர்' கொடுத்த கையோடு வழமைபோல அதிலும் ஊழல் பெருச்சாளிகளின் கைவரிசை பற்றிய தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.**

**இப்போது அந்த மோசடி, ஊழலை மூடி மறைக்கும் அடுத்த பெரும் கபடத் திட்டம் பற்றிய தகவல் வெளியாகியிருக்கின்றது.**

**கொவிட் தடுப்பூசி ஏற்றலில் ஏற்கனவே நமது நாடு மிகுந்த பின்னடைவில் – கால தாமதத்தில் – இருக்கின்றது. உரிய நேரத்தில் தடுப்பூசி பெறுவதற்கு சரியான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.**

**கடைசி நேரம் வரை இழுத்தடித்து விட்டு, தடுப்பூசியை அவசர, அவசரமாகப் பெறுவதற்கான ஒப்பந்தம் என்ற பெயரில் சீனத் தரப்புடன் தடுப்பூசி வாங்குவதற்கான ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.**

**அந்த ஒப்பந்தத்தில்தான் ஊழல் என்று இப்போது முறைப்பாடுகள் எழுந்துள்ளன. அப்படி ஊழலை மூடி மறைப்பதற்கான ஏற்பாட்டையும் அதற்கான ரத்தையும் அந்த ஒப்பந்த வாசகங்களில் சேர்த்துக் கொண்டுதான் இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றார்கள் என்ற விடயம் இப்போது அம்பலமாகியிருக்கின்றது.**

**இந்தத் தடுப்பூசியை பங்களாதேஷ் நாட்டுக்கு, தடுப்பூசி ஒன்று பத்து டொலர் என்ற விலையில் சீனா வழங்குகின்றது.**

**அதேசமயம், இலங்கையோ அதே தடுப்பூசி ஒன்று பதினைந்து டொலர் என்ற விலைக்கு சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ள ஒப்பந்தம் செய்திருக்கின்றது.**

**அதாவது ஐம்பது வீதம் விலை அதிகம். அதுவும் ஒன்று, இரண்டு ஊசிகள் அல்ல. ஒரு கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகள்.**

**இது பற்றி சர்ச்சை எழுந்தபோது வழமை போல இலங்கை ஆட்சிப் பீடத்தைப் பாதுகாக்க முயன்றது கொழும்பில் உள்ள சீனத் தூதரகம்.**

**"மருந்து ஏற்றுமதி நிறுவனங்கள் வெவ்வேறு தரப்புகளுக்கு வெவ்வேறு விலைகளில் மருந்துகளை ஏற்றுமதி செய்வது வழமை. இலங்கைநல்லவிலையில், அதேசமயம்விரைந்தும்தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பைத்தான் பயன்படுத்துகின்றது." – என சமாளிக்க முயன்றது சீனத் தூதரகம். சீனத் தூதரகம் குறிப்பிடுவதுபோல அந்தத் தடுப்பூசி இலங்கைக்கு கிடைக்கும் வேகத்தின்(?) சீத்துவம் எல்லோருக்கும் தெரிந்தது தான்.**

**பங்களாதேஷ் பத்து டொலருக்கு வாங்கும் ஊசியை இலங்கை ஏன் பதினைந்து டொலருக்கு வாங்குகின்றது என இலங்கை மக்களும், எதிரணியும் கேள்வி எழுப்பும்போது, அதற்கு அரசுப் பக்கத்தில் இருந்து வரும் பதில் அதிர்ச்சியை அளிப்பதாக உள்ளது.**

**இந்த விடயத்தில் வெளிப்படைத் தன்மையை மூடி மறைப்பதன் மூலம், ஊழலுக்கான வாய்ப்புக்கு முழு அளவில் இடமளித்துத்தான் அந்த ஊசிக் கொள்வனவு ஒப்பந்தமே செய்யப்பட்டிருக்கின்றது என்ற விடயம் இப்போது அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.**

**"இந்தக் கொள்வனவில் வாங்கப்படும் ஊசிகளின் விலை பகிரங்கப்படுத்தப்பட்டால் அல்லது பொதுத் தளத்தில் இவ்விடயம் பேசப்பட்டால், இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகி விடுவோம் அல்லது சட்ட நடவடிக்கை எடுப்போம்." – என்று சீனாவில் இந்தத் தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்யும் 'சினோவாக் லைவ்சயன்ஸ் கம்பனி' அறிவித்திருப்பதாக, இங்கு அதனை இறக்குமதி செய்யும் 'கெலுன் லைவ்சயன்ஸ் கம்பனி'யின் தலைவர் வி.நடராஜா, இலங்கை மருந்தாக்கல் துறை அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றார்.**

**பல்லாயிரம் கோடி ரூபாவுக்கு தடுப்பூசிகளை அவர்கள் இறக்குமதி செய்வார்களாம். ஆனால் அது குறித்து மக்கள் பகிரங்க வெளியில் பேசக்கூடாதாம். இப்படி ஓர் ஒப்பந்தம்.**

**இந்த ஒப்பந்தத்தைச் செய்த அரசும் அதன் முக்கிய தரப்புகளும் ஒரு விடயத்தை மறந்து விடக்கூடாது. அரசுப் பணத்தை – மக்களின் வரிப்பணத்தை – செலுத்தித்தான் இந்த ஊசிகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இது அவர்கள் வீட்டு விவகாரம் அல்ல – விலை விவரத்தை மூடி மறைப்பதற்கும், மக்களுக்கு உண்மைகளை எடுத்துரைக்க விடாமல் தடுப்பதற்கும்.**

# பஸில் நாடு திரும்பியதால் இனி பொற்காலம் ஏற்படும்

## இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த நம்பிக்கை



முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ள நிலையில், கட்சிக்குள் உள்ள அனைத்துப்பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விடும் என இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

அனைத்துசவால்களையும் எதிர்கொண்டு, கொவிட் தொற்று நோய்க்கு மத்தியில் மக்களைக்காப்பாற்றி நாட்டை முன்னேற்றும் வேலைத் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தனிப்பட்ட விஜயமாக வெளிநாடு சென்றிருந்த பஸில் ராஜபக்ஷ தற்போது இலங்கை திரும்பியுள்ளார். அவர் குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுனவை உருவாக்கித் தேர்தல்களில் வெற்றிகளில் மிகப் பெரிய சக்தியாக இருந்தார்.

பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளமையால், கட்சிக்குள் இருக்கும் அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விடும் என நம்புகிறேன்.

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றதும் நாட்டில் பொற்கால யுகம் ஏற்படும். இதனை எதிர்க்கட்சிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்பதால், சேறு பூசும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் பியல் நிஷாந்த குறிப்பிட்டுள்ளார்

# பஸிலுக்கு எம்.பி. பதவி வழங்க தியாகம் செய்ய பலர் காத்திருப்பு!

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு வருவாராக இருந்தால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அனைத்து தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவருக்கான இடங்களை வழங்கத் தயாராகவே உள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் – 'பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்குள் வருகின்றமை தொடர்பிலான தகவல்களில் எந்த உண்மையும் இல்லை, அத்துடன், 'இது பற்றி பேச வேண்டிய நேரம் இதுவல்ல,' எனவும் அவர் கூறியுள்ளார்.

# 900 ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களுக்கு முல்லைத்தீவில் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 900 ஊழியர்களுக்கு இதுவரை கொவிட்–19 தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு ஆடைத்தொழில்சாலை பணியாளர்களுக்கு கொவிட்–19 தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலை ஏனைய பணியாளர்களுக்கும் கொவிட்–19 தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதன்படி இதுவரை மொத்தம் ஆடைத்தொழிற்சாலை பணியாளர்கள் 900 பேருக்கு கொவிட்–19 தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே கொவிட் –19 தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட ஆடைத்தொழிற்சாலை பணியாளர்களில் 20 பேருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் 16 பேர் மீள வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மாந்தை மேற்கில் காணி அபகரிப்பு சார்ள்ஸ் எம்.பி. உடன் கள விஜயம்



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளியடி பகுதியில் கடந்த 2013 ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்குவதாக முடிவெடுக்கப்பட்ட காணிகளை தனிநபர் ஒருவர் அபகரித்து காடுகளை அழித்து அத்துமீறி செயற்பட்டு வருகிறார் என அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் மேற்படி பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமையை அவதானித்துள்ளார்.

குறித்த பகுதியில் மக்களின் விவசாய நடவடிக்கைக்கு என 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணிகள் வனவள திணைக்களத்தால் எல்லை இடப்பட்டிருந்த நிலையில் அண்மையில் மக்களின் தேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தன.

பொருளாதார நிலை மற்றும் 'கொவிட்' பிரச்சினை காரணமாக மக்கள் காணிகளை துப்புரவு செய்யாத நிலையில், மாந்தை மேற்கு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஒரு வார காலத்துக்கு மேலாக மக்களின் காணிகளைத் துப்புரவு செய்துள்ளமையுன் ,காணிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டு வந்த நிலையில் அப்பகுதி மக்களால் கிராம அலுவலகர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு பல முறை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்காத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிடம் முறையிட்ட நிலையில் நேற்று (சனிக்கிழமை) அவர் குறித்த பகுதிக்கு விஜயம் மேற் கொண்டமையுடன் மக்களிடம் நேரடியாக பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார்.

அதே நேரம் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்தி விரைவில் மக்களின் காணிகளை விடுவித்து வழங்குவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொலம்பியா அதிபர் சென்ற ஹெலிக்கொப்டர் மீது துப்பாக்கிச் சூடு



தென் அமெரிக்க நாடான கொலம்பியாவின் அதிபர் இவான் டியூக், நேற்று தலைநகர் போகோடாவில் இருந்து நாட்டின் வடகிழக்கு பகுதியில் வெனிசுலாவின் எல்லையை ஒட்டி அமைந்துள்ள கோகட்டா நகருக்கு ஹெலிக்கொப்டரில் புறப்பட்டுச் சென்றார். அவருடன் இராணுவ அமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் நோர்டே டி சாண்டாண்டர் மாகாண ஆளுநர் ஆகியோர் பயணித்தனர்.

இந்த நிலையில் இந்த ஹெலிக்கொப்டர் கோகட்டா நகரில் தரை இறங்கும் சமயத்தில் பயங்கரவாதிகள் ஹெலிக்கொப்டரை குறிவைத்து துப்பாக்கியால் சுட்டனர். ஹெலிகாப்டரில் 6 முறை துப்பாக்கியால் சுடப்பட்டது. இதனால் பெரும் பதற்றமும், பீதியும் உருவானது. எனினும் விமானிகள் மிகவும் சாதுரியமாக செயல்பட்டு ஹெலிக்கொப்டரை பத்திரமாக தரை இறக்கினர். அதனைத் தொடர்ந்து அதிபர் இவான் டியூக் உள்பட ஹெலிக்கொப்டரில் இருந்த அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

விமானிகளின் அசாத்திய திறமையால் ஹெலிகாப்டர் உடனடியாக தரை இறக்கப்பட்டதால் அதிபர் உள்பட அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம் அதிபரின் ஹெலி காப்டரை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்கு தலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

## இந்தியாவைப் போன்று

# அமெரிக்காவுடன் நாகரிகமான உறவை பாகிஸ்தான் விரும்புகிறது–இம்ரான்கான்



அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் தற்போது இருப்பதை போலவே பாகிஸ்தான் அமெரிக்காவுடன் ஒரு நாகரிகம் மற்றும் சமமான உறவை நாடுவதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார் . அமெரிக்காவின் பிரபல நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியியில் இம்ரான் கான் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தான் பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்றவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அணுகிய போதிலும், இந்தியாவுடனான உறவை சீராக்க தான் மேற்கொண்ட முயற்சி எந்த முன்னேற்றத்தையும் அடையவில்லை என கூறினார்.

கடந்த காலத்தில் இந்தியா போன்ற, பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளை விட பாகிஸ்தான் அமெரிக்காவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததாகவும், தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவின் கூட்டாளியாக இருந்ததாகவும் இம்ரான் கான் இந்த பேட்டியின் போது குறிப்பிட்டார். துரதிஷ்டவசமாக பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் போது ஏற்பட்ட உறவில் விரிசல் ஏற்பட்டதாகவும், அதனை மீட்டெடுக்க விரும்புகிறோம் எனவும் இம்ரான்கான் தெரிவித்தார்.

# கொரோனாவை எதிர்கொள்ளும் நடவடிக்கையில் உலகம் தவறு செய்கிறது; உலக சுகாதார அமைப்பு



உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேஸ், ஜெனிவாவில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசினார். அப்போது அவர், கொரோனா வைரஸை எதிர்கொள்ளும் நடவடிக்கையை பொறுத்தமட்டில், 1980களில்எச்.ஐ.வி., எய்ட்ஸ்நெருக்கடியின்போது செய்த அதே தவறை உலக நாடுகள் இப்போதும் செய்கின்றன. எச்.ஐ.வி., எய்ட்ஸ் சிகிச்சையானது வளர்ச்சி அடைந்த நாடுகளில் பரவலாக ஆன பின்னர், குறைவான வருமானம் கொண்ட நாடுகளை சென்றடைய 10 ஆண்டுகள் ஆனது எனக் குறிப்பிட்டார்.

கொரோனாத் தடுப்பூசி அதிக வருமானம் கொண்ட நாடுகளில் ஏற்கனவே பரவலாகி இருக்கிறது, ஆனால் பல ஏழை நாடுகளில் இன்னும் ஒரு டோஸ் தடுப்பூசி கூட போய்ச்சேரவில்லை என்று இவர் ஏற்கனவே விமர்சித்து வருகிறார். கொரோனாத் தடுப்பூசி ஏழை நாடு, பணக்கார நாடு என்ற பாரபட்சம் இன்றி அனைவருக்கும் சமமான அளவில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று இவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# கிரீஸ் நாட்டில் மகாத்மா காந்தி சிலையை திறந்து வைத்தார் அமைச்சர் ஜெய்சங்கர்

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மூன்று நாள் பயணமாக கிரீஸ் நாடு சென்றுள்ளார். நேற்று விமானம் மூலம் கிரீஸ் சென்றடைந்த அவர், அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் நிகோஸ் டெண்டியாஸை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு குறித்து வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜெய்சங்கர் – நிகோஸ் டெண்டியாஸ் இடையில் குறித்து இருவரும் ஆலோசித்தனர். இரு தரப்பு பிராந்தியங்களில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும், உலக அளவில் நிலவும் சிக்கலான பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து, கிரீஸ் நாட்டின் தலைநகரான ஏதென்ஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலையை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் நிகோஸ் டெண்டியாஸ் இருவரும் திறந்து



நடந்த சந்திப்பில், இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினர். வர்த்தகம், முதலீடு, அறிவியல், தொழில்நுட்பம், கலாசாரம், கல்வி மற்றும் மக்கள் இணைப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு நல்குவது வைத்தனர். இதுதொடர்பாக , தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள ஜெய்சங்கர், மகாத்மா காந்தியின் போதனைகள் உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றன என தெரிவித்துள்ளார்.



## சமூக இடைவெளியை மீறி

# பெண் உதவியாளரை முத்தமிட்ட சுகாதார அமைச்சர் ராஜினாமா!

## இங்கிலாந்தில் சம்பவம்

இங்கிலாந்தில் அண்மையில் கொரோனா கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பு வரை சமூக இடைவெளியை உறுதி செய்யும் வகையில் பொது இடங்களில் கை குலுக்குதல், கட்டித் தழுவுதல் போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்தச் சூழலில் அந்த நாட்டின் சுகாதாரத்துறை மந்திரி மாட் ஹான்க் கொரோனா சமூக இடைவெளி விதிமுறைகளை மீறி தனது அலுவலகத்தில் வைத்து பெண் உதவியாளரை கட்டியணைத்து முத்தம் கொடுத்த சம்பவம் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. சமூக இடைவெளி விதிமுறைகள் அமுலில் இருந்த சமயத்தில் மாட் ஹான்க் தனது உதவியாளருக்கு முத்தம் கொடுத்த காட்சி அங்குள்ள கண்காணிப்பு கமராவில் பதிவான நிலையில், அந்த நாட்டின் பிரபல தினசரி பத்திரிகை ஒன்று இது தொடர்பான படங்களை வெளியிட்டது.

இதனைத் தொடர்ந்து சுகாதார அமைச்சர் மாட் ஹான்க் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்ததோடு, பிரதமர் போரிஸ் ஜான்சனிடம் இது தொடர்பாக மன்னிப்பும் கோரினார். இதையடுத்து மாட் ஹான்க்கின் மன்னிப்பை ஏற்றுக்கொண்டதாகவும், இந்த பிரச்சினை முடிந்து விட்டதாகவும் போரிஸ் ஜான்சன் அறிவித்தார்.

எனினும் இந்த விவகாரத்தில் சுகாதார அமைச்சர் மாட் ஹான்க் பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் வலியுறுத்தல் காரணமாக சுகாதார அமைச்சர் மாட் ஹான்க் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.



# திருச்சி முகாம் ஈழத் தமிழர்களோடு மாவட்ட ஆட்சியாளர் பேச்சு

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் குற்ற வழக்குகளில் தொடர்புடையதாகக் கூறிக் கைது செய்யப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் உட்பட வெளிநாட்டினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் உள்ளனர்.

'இலங்கைத் தமிழர்களான நாங்கள் எந்தவிதக் குற்றங்களையும் செய்யவில்லை. ஆனாலும், குற்றவாளிகளாக அடைத்துவைத்து, தற்போது தண்டனைக் காலம் முடிந்த பின்னரும் தொடர்ந்தும் உள்ளேயே வைக்கப்பட்டிருக்கிறோம். எங்களை விடுதலை செய்யவேண்டும்' என்று கோரி, 18 நாள்களாக தொடர் காத்திருப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டம் 9 ஆம் திகதி ஆரம்பமாகியது. முதலில் உணவுத் தவிர்ப்புப் போராட்டமாக ஆரம்பித்து, பின்னர் அதிகாரிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் காத்திருப்புப் போராட்டமாக இது மாற்றப்பட்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட எழுத்தாளரான 52 வயதுடைய மொஹமட் அலி என்பவர் கடந்த 19 ஆம் திகதி உடல் நலக்குறை வால் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்திருந்தார்.

தற்போது இலங்கையின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் 5 பேர் உட்பட 77 பேர் காத்திருப்புப் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

இவர்களோடு மாவட்ட ஆட்சியரும் அதிகாரிகளும் பேச்சில் ஈடுபட்ட போது அவர்கள் தங்கள் தரப்புப் பிரச்சினைகளை அவர்களிடம் எடுத்துக்கூறியுள்ளனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நம்பியுள்ளோம் எனவும். அவர் தலையிட்டுத் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும், தண்டனைக் காலம் முடிந்தும் விடுதலை செய்ய மறுக்கிறார்கள் என்றும், விசாரணைக் கைதிகளாகச் சிறைப்படுத்தப்பட்ட தாங்கள், நீதிமன்றப் பிணையில் வெளியில் வந்தும்கூட கைது செய்து மீண்டும் சிறப்பு முகாமில் அடைத்துள்ளதாகவும், காலவரையின்றியும் நீதிமன்ற நடவடிக்கையும் இல்லாது அடைத்து வைத்திருப்பதாகவும், தங்கள் குடும்பங்களுடன் சேர்த்துவைத்து அதன்பின்னர் தங்களுக்கான வழக்குகளைச் சட்ட ரீதியில் தொடர உதவுமாறும் தமிழ்நாட்ட அரசுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொரோனாவின் மூன்றாவது அலை மிகக் கடுமையானதாக இருக்காது

## எய்ம்ஸ் இயக்குநர் நம்பிக்கை



டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் இயக்குநரான டாக்டர் ரந்தீப் குலேரியா, ஆங்கில செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று பேட்டி அளித்திருந்தார். 'கொரோனா நோய்த் தடுப்புக்கு மாறுபட்ட 2 தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்வது நல்லதா?' என்ற கேள்விக்கு பதில் அளிக்கும்போது அவர்,

தொற்று நோய்களுக்கு மாறுபட்ட இரண்டு தடுப்பூசிகளைச் செலுத்தும் நடைமுறை முன்பே உள்ளது. முதல் ஊசியை தொடக்க ஊசியாகவும், 2 ஆவது ஊசியை செயல்திறன் ஊக்குவிப்பாகவும் செலுத்திக்கொள்ளலாம். எபோலா வைரஸ் போன்ற தொற்றுநோய் களுக்கு இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. தற்போது கொரோனா நோய்த் தடுப்புக்கும் இது போன்ற சோதனையை பல நாடுகள் அனுமதித்துள்ளன.

டெல்டா, டெல்டா பிளஸ் போன்ற மாறுபட்ட கொரோனாத் தொற்றுகளை எதிர்த்துப் போராட 2 கலப்பு ஊசிகள் சாத்தியமானதாக இருக்கலாம். அதே நேரத்தில் இரு வேறு ஊசிகளை பயன்படுத்தினால் அதிக பக்கவிளைவுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளன. எனவே, இதுபற்றி முடிவு எடுப்பதற்கு கூடுதல் தரவுகள் தேவை என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியாவில் டெல்டா, டெல்டா பிளஸ் கொரோனாத் தொற்றுக்கள், மூன்றாவது அலை உருவாவதற்கான சாத்தியக்கூறுகளாக இருக்கலாம் என்றும், 'ஆனால், இரண்டாவது அலையைப் போன்று மூன்றாவது அலை மிகக் கடுமையானதாக இருக்காது என்று கருதுகிறேன் எனவும்அவர் தெரிவித்திருக்கிறார்.

## முகக்கவசம் அணியாமல் வந்த வாடிக்கையாளரை

# துப்பாக்கியால் சுட்ட வங்கிக் காவலர் கைது



உத்தரப்பிரதேசத்தின் பரேலியைச் சேர்ந்த புகையிரத ஊழியரான ராஜேஷ் ரத்தோர் என்பவர் அங்குள்ள 'பாங்க் ஒஃப் பரோடா' வங்கிக் கிளைக்குச் சென்றபோது முகக்கவசம் அணியாமல் சென்றுள்ளார். அதனால், வங்கிக் காவலர் அவரை உள்ளே அனுமதிக்காது தடுத்துள்ளார். வங்கி ஊழியர்களும் அவருக்கு சேவை வழங்கமுடியாது என்று தெரிவித்துள்ளனர்.

எனவே, அவர் வெளியில் சென்று முகக்கவசம் ஒன்றை வாங்கி அணிந்து திரும்பிவந்தபோதும் வங்கிக் காவலருக்கும் அவருக்குமிடையே வாய்த்தர்க்கம் தகராறாக மாறியுள்ளது. அப்போது வங்கிக் காவலர் குறித்த நபரைத் துப்பாக்கியால் சுட்டுள்ளார். இதில், இடது தொடையில் குண்டுபாய்ந்து அந்த நபர் பலத்த காயம் அடைந்துள்ளார்.

இது குறித்த புகாரின்பேரில் பொலிஸார் குறித்த வங்கிக் காவலரிடம் விசாரணை நடத்தி அவரைக் கைது செய்துள்ளனர். தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த பாதுகாப்பு ஊழியரான அவர், பணியிலிருந்தும் இடைநீக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. முகக்கவசம் அணியாமல் வந்தவரை வங்கிக் காவலா துப்பாக்கியால் சுட்ட சம்பவம் உத்தரப்பிரதேசத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஜம்மு விமான நிலையத்தில் 5 நிமிட இடைவெளியில்

# அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்தன



இந்தியாவின் ஜம்மு மாநில பிரதான விமான நிலையத்தில் அதிகாலை 1.45 மணியளவில் 5 நிமிட இடைவெளியில் இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

முதல் குண்டு மேற்கூரையிலும், இரண்டாவது குண்டு தளத்திலும் வெடித்துள்ளன. இதனால், உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என முதற்கட்டத் தகவல்களில் தெரியவந்துள்ளது.

விமான நிலையம் தற்போது பாதுகாப்புப்படையின் தீவிர கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மூத்த காவல்துறை அதிகாரிகளும், தடயவியல் நிபுணர்களும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மற்றும் தடயங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# டிசெம்பருக்குள் அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றப்படும்

## உச்ச நீதிமன்றில் இந்திய அரசு தகவல்

இந்தியாவில் கொரோனா பேரிடர் காலத்தில் அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் விநியோகம், சேவைகளின் தன்மை தொடர்பாக உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து பதிவு செய்த வழக்கை நீதிபதிகள் டி.வை.சந்திர சூட், எல்.நாகேஸ்வரராவ், எஸ்.ரவீந்திர பட் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் இந்திய மத்திய சுகாதார அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் மனோகர் அக்னானி சார்பில் 380 பக்கங்கள் கொண்ட விரிவான பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'அதில், கொரோனாத் தடுப்பூசிக்கான தேசிய திட்டத்தை மத்திய அரசு மே மாதம் தொடங்கி தொடர்ந்து மீளாய்வு செய்து வருகிறது. கொரோனாத் தடுப்பூசி திட்டத்துக்கான ஜூன் 21ஆம் திகதிய திருத்தப்பட்ட வழிகாட்டுதலின்படி, நாட்டில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளின் 75 சதவீதத்தை மத்திய அரசு வாங்கி அதை மாநிலங்களுக்கு இலவசமாக வழங்கும். மாநிலங்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் 18 வயதானவர்களுக்கு இலவசமாக செலுத்தப்படும்.

தற்போதைய நிலையில் இந்திய மத்திய அரசு மொத்தம் 35.6 கோடி தடுப்பூசிகளை கொள்முதல் செய்துள்ளது. மே முதல் ஜூலை மாத வரையிலான காலகட்டத்தில் நாடு முழுவதும் மேலும் கூடுதலாக 16 கோடி தடுப்பூசிகள் கிடைக்கும். இதன்படி ஜனவரி முதல் ஜூலை வரை 51.6 கோடி தடுப்பூசிகள் கிடைக்கும். நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுமார் 94 கோடி பேர் உள்ளனர். அவர்களுக்கு இரு தவணை கொரோனா தடுப்பூசிகளைச் செலுத்த 186 முதல் 188 கோடி வரையிலான தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன. ஓகஸ்ட் தொடக்கம் டிசெம்பருக்குள் மேலும் 135 கோடி தடுப்பூசிகள் கிடைக்கும். அவற்றைக் கொண்டு இந்த ஆண்டு டிசெம்பருக்குள், 18 வயதான அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தமுடியும். கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்த இந்திய மத்திய அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதலையான 16 அரசியல் கைதிகளில் ஒருவர் கூட கிழக்கில் இருந்து இல்லை

## மட்டக்களப்பு மாவட்டக் கூட்டமைப்பு எம்.பி. ஜனா விசனம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விலக்குமாறும் வலியுறுத்து

**(வி.ரி.சகாதேவராஜா)**

1978ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவினால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத்தடைச்சட்டம் ஒரு ஜனநாயக விரோத செயற்பாடாகும்.அச்சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம்(ஜனா) வேண்டுகோள்விடுத்துள்ளார்.



கடந்த ஒரு தசாப்தகாலத்திற்கு மேலாக இலங்கைத் தமிழர் தரப்பில் பேசுபொருளாகவ இருந்து வந்த தமிழ்அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் கடந்தவாரம் ஒரு முக்கிய கட்டத்தையடைந்துள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா சமகால நிலைவரம் தொடர்பில் கருத்துரைத்தார். உண்மையில் பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் தமிழர்போராட்டத்தை நசுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டுவரப்பட்ட இச்சட்டமானது எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. மாறாக போராட்டம் வீரியமடைந்ததே வரலாறு.

மக்கள் குறிப்பாக சிறுபான்மையினர் அரசுக்கெதிராக கிளர்ந்தெழ முடியாது, வாய்திறக்கக்கூடாதென்பதே அவர்களது எதிர்பார்ப்பாகவிருந்தது. அதனை ஒரு ஜனநாயக விரோத செயற்பாடு என ஐரோப்பிய ஒன்றியமும் தெரிவித்துள்ளது.

இதனைத்தான் நாங்களும் கடந்தகாலங்களில் கூறிவந்திருக்கிறோம். இத்தடைச் சட்டத்தை நீக்கி நாட்டில் நிரந்தர அரசியல்தீர்வை கொண்டுவாருங்கள். அப்போது நாட்டில்குழப்பமும்வராதுபோராட்டமும் இருக்காது.

தமிழ் அரசியல்கைதிகள் விடுதலை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை நிறுத்தப்படுமென்ற அழுத்தம் இன்று தமிழ் அரசியல்கைதிகளை விடுதலை செய்யவைத்திருக்கின்றது. ஜனாதிபதியினால் பொசனன்று விடுதலை செய்யப்பட்ட 16 அரசியல் கைதிகளில் ஒருவராவது கிழக்கைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது கவலைக்குரியவிடயம்.

அண்மையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சம்பவத்தில் மட்டக்களப்பு கிரானைச்சேர்ந்த 10 பேர் கைதுசெய்யப்பட்டு இதே சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல் முகநூலில் தவறாக பதிவிட்டார்கள் என்றபெயரிலும் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களெல்லாம் விடுதலை செய்யப்பட வேண்டும்.

எதுஎவ்வாறெனினும் ஜனாதிபதியின் செயற்பாட்டை நாம் வரவேற்கிறோம். அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிற்கும் நன்றிகள். இந்த 16 பேர் மட்டுமல்லர், அனைத்துத் தமிழ் அரசியல்கைதிகளும் விடுதலைசெய்யப்பட வேண்டும். அதற்கு அமைச்சர் நாமலும் ஜனாதிபதியும் அடுத்த பொசன் வரைக்கும் காத்திராது விரைவில் விடுதலைசெய்யநடவடிக்கைமேற்கொள்ள வேண்டும். – எனத் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில்

# நிர்ணய விலைக்கு நெல் கொள்வனவு திட்டம்

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில் அமைச்சர்கள் விஜயம் செய்து நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக நிர்ணய விலைக்கு நெல் கொள்வனவு செய்யும் வேலைத் திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்திலுள்ள அரசடிச்சேனை நெல் சந்தைப்படுத்தல் நிலையத்தில் இவ்வருடத்தின் சிறுபோகத்தில் விளைந்த உலர்த்திய நெல்லினை அரசாங்கத்தின் நிர்ணய விலையான 56 ரூபா 50 சதத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

விவசாயஅமைச்சர்மஹிந்தானந்தஅளுத்கமகே, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய முகாமையாளர், அமைச்சின் செயலாளர்கள் போன்றோர் கலந்துகொண்டு சம்பிரதாயபூர்வமாக நெல் கொள்வனவை ஆரம்பித்து வைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஆளணிகள் நெல் களஞ்சியங்கள் தேவை தொடர்பில் அமைச்சரிடம் கோரிக்கை முன் வைத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, முதலாளிமாருக்கு நெல்லினை வழங்குவதால் அவர்களே விலையை தீர்மானிக்கின்றார்கள் எனவே அரசாங்கத்திற்கு அதிகமான நெல்லினை வழங்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.



# 3ஆம் அலையில் தொற்று எண்ணிக்கை கிழக்கில் பத்தாயிரத்தைத் தாண்டியது

நேற்று வரையான 24 மணித்தியாலங்களில் கிழக்கு மாகாணத்தில் 211 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம்.தௌபீக் இதனைத்தெரிவித்துள்ளார்.

இதன்படி, கடந்த 24 மணி நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 157 நோயாளிகளும், கல்முனையில் 29 பேரும் அம்பாறையில் 15 பேரும் திருகோணமலையில் 10 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 இன்மூன்றாவது அலையில், கிழக்கு மாகாணத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது. 230 மரணங்களும் பதிவாகியுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலும் யூலை மாத முற்பகுதியில் இருந்து தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். தௌபீக் குறிப்பிட்டுள்ளார்.

# கைதிகள் மூலமாக உற்பத்தித் திட்டம் மட்டக்களப்பில் நேற்று தொடங்கியது

சிறைத் தண்டனை அனுபவித்துவரும் கைதிகளைப் பயன்படுத்தி உற்பத்திகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகள் மட்டக்களப்பில் நேற்று (சனிக்கிழமை) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.



நாட்டைசுபீட்சத்தைநோக்கி கொண்டு செல்லும் ஜனாதிபதியின் செயற்றிட்டத்திற்கமைய சிறைச்சாலையிலிருந்து 'விவசாய நிலத்திற்கு சேதனப் பசளை உற்பத்தி மற்றும் காய்கறி உற்பத்தி' எனும் தொனிப்பொருள் இந்த நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சொந்தமான 23 ஏக்கர் பண்ணையில் பயிர் செய்கைகள் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி என்பன இடம்பெறவுள்ள இடத்தை அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்டோர் நேரில் பார்வையிட்டமையுடன், இந்த வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் துஷார உப்புல் தெனிய தலைமையில் திருப்பெருந்துறையிலுள்ள சிறைச்சாலைக்குச் சொந்தமான பண்ணையில் நடைபெற்றது.

இதில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பிரதேச அபிவிருத்தி குழுவின் பிரதித் தலைவர் பா.சந்திரகுமார், மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகர மற்றும் அமைச்சர்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# பொத்துவிலில் கடலுக்குச் சென்ற இரு மீனவர்களைக் காணவில்லை

பொத்துவில், அறுகம்பை மீன்பிடித் துறையிலிருந்து இயந்திரப் படகில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர் என உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நிலையில் இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

பொத்துவில் களப்புக்கட்டு பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான மொகமட் தாஹா என்பவரும், பொத்துவில் பசரிச் சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய மொகமட் ஜௌபர் என்பவரும் நேற்று வரை வீடு திரும்பவில்லை. அவர்கள் காணாமல் போயுள்ளனர்.

இதேவேளை காணாமல் போன இருவரையும் இலங்கை கடற்படையினர்கள் சுழியோடிகளின் உதவியுடன் தேடி வருகின்றனர் எனக் கடற்படை அதிகாரி ரியல் அட்மிரல் ஜயந்த கமகே தெரிவித்துள்ளார்.



### யூரோ கிண்ணக் காலிறுதிச்சுற்றில் விளையாட

# டென்மார்க், இத்தாலி அணிகள் தகுதிபெற்றன



யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று காலிறுதிக்கு முந்தைய விலகல் (நொக்-அவுட்) சுற்றுக்கான போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நேற்று நடந்த முதலாவது போட்டியில் பலம்வாய்ந்த டென்மார்க் அணியை எதிர்த்து வேல்ஸ் அணி களம் கண்டது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியின் முதல் பாதியில் டென்மார்க் அணி ஒரு கோல் அடித்து 1:0 என்ற கோல் கணக்கில் முன்னணியில் இருந்தது.

பின்னர், இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களும் ஆக்ரோசத்துடன் தங்களது திறமையை வெளிப்படுத்தினர். ஆனால், டென்மார்க் அணியின் தடுப்பாட்டக்காரர்களைத் தாண்டி வேல்ஸ் அணியால் கோல்களை அடிக்க முடியவில்லை.

அந்த அணிக்குக் கிடைத்த சில வாய்ப்புகளும் வீணாக, இறுதியில் டென்மார்க் அணி மேலும் 3 கோல்கள் அடித்து 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இதைத்தொடர்ந்து இத்தாலி மற்றும் ஒஸ்திரியா அணிகளுக்கு இடையே நடைபெற்ற இரண்டாவது போட்டியில் முதல் பாதி கோல் எதுவும் இன்றி முடிவடைந்தது. இரண்டாவது பாதியில் இத்தாலி அணி இரண்டு கோல்களும், ஒஸ்திரிய அணி ஒரு கோலும் அடித்தன. இறுதியில் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்ற இத்தாலி அணி காலிறுதிக்குள் நுழைந்தது.

இன்று இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் ஆட்டத்தில் நெதர்லாந்து அணியை எதிர்த்து செக் குடியரசு அணி களம் காண்கிறது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 9.30இற்கு ஆரம்பமாகவுள்ளது.

இதையடுத்து இரவு 12.30 இற்கு நடைபெறும் இரண்டாவது போட்டியில் போர்த்துக்கல் அணியை எதிர்த்து பெல்ஜியம் அணி பலப்பரீட்சை நடத்தவுள்ளது. இவ்விரு போட்டிகளிலும் வெற்றிபெறும் அணிகள் காலிறுதிச் சுற்றுக்குத் தகுதிபெறும்.

### இங்கிலாந்து அணியுடனான மூன்றாவது ரி-20யிலும்

# இலங்கை அணி மண் கவ்வியது

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது. இதனையடுத்து மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 3 -0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முழுமையாகக் கைப்பற்றியுள்ளது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் இங்கிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. இங்கிலாந்து அணி, தனக்கான 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. டேவிட் மலன் 76 ஓட்டங்களையும் பெயர்ஸ்டோ 51 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் துஷ்மந்த சமீர 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனை அடுத்து ஆடிய இலங்கை அணி 18.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 89 ஓட்டங்களால்படுதோல்வியடைந்தது. அதிகபட்சமாக பினுர பெர்னான்டோ 20 ஓட்டங்களையும் ஒத பெர்னான்டோ 19 ஓட்டங்களையும் பெற, உதிரியாக 16 ஓட்டங்கள் கிடைத்திருந்தன. போட்டியின் சிறப்பாட்டக்காரராக டேவிட் மலனும் தொடர் நாயகனாக சாம் கரனும் தெரிவானார்கள். இவ்விரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடர் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



### ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக வீர-வீராங்கனைகளுக்கு

# 3 கோடி ரூபா பரிசு

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்



விளையாட்டு வீரர்களுக்கான கொரோனாத் தடுப் பூசி சிறப்பு முகாம் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்வை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் ஆரம்பித்து வைத்தார். அப்போது ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 வீரர்களுக்கு தலா 5 லட்ச ரூபா ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. நிகழ்வின் போது பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் "விளையாட்டு போட்டியில் அணியாகச் செயற்படுவது மிக முக்கியமானது. உடலுக்கும், மனதுக்கும் ஊக்கம் தரும் வகையில் இந்த நிகழ்ச்சி அமைந்துள்ளது.


விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு உடல் உறுதியும் ஊக்கமும் அவசியம். விளையாட்டு வீரர்கள் அடுத்த தலைமுறைக்கு ஊக்கம் தரக்கூடியவர்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு தமிழக அரசுப் பணி வழங்கப்பட்டு வருகிறது. விளையாட்டு வீரர்களுக்கு 10 லட்ச ரூபா வரை, கருவிகள், பயணச் சீட்டு உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன. ஜப்பானில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் 7 தமிழக வீர-வீராங்கனைகள் பங்கேற்கின்றனர் என்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. ஏற்கனவே ஒரு வீராங்கனைக்கு 5 லட்ச ரூபா வழங்கப்பட்ட நிலையில் ஏனைய 6 பேருக்கும் அதே ஊக்கத் தொகை வழங்கப்படும். தமிழ்நாட்டில் நான்கு ஒலிம்பிக் அகாடமிகள் அமைக்கப்படும் என தி.மு.க. தேர்தல் அறிக்கையில் உறுதி அளிக்கப்பட்டது. தி.மு.க. அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப் படும். விளையாட்டுக்கு தொடர்ந்து ஊக்கம் அளித்தால் அமெரிக்கா போன்ற நாடுகளை நாம் பின்னுக்குத் தள்ளும் நாள்கள் தொலைவில் இல்லை. மாற்றுத் திறனாளிகளான விளையாட்டு வீர- வீராங்கனைகளுக்கு வீட்டுக்கே சென்று தடுப்பூசி செலுத்தப்படுகிறது. ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக வீரர்களுக்கு 3 கோடி ரூபா பரிசு வழங்கப்படும். ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வெல்வோருக்கு 2 கோடியும், வெண்கலம் வென்றால் ஒரு கோடி பரிசு வழங்கப்படும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### இந்திய - இங்கிலாந்து மகளிர் அனிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பம்

இந்திய - இங்கிலாந்து மகளிர் அணிகள் மோதும் முதலாவது ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது. இரு அணிகளுக்குமிடையிலான ஒரேயொரு டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடர் இன்று ஆரம்பமாகியுள்ளது.

ஹீதர் நைட் தலைமையிலான உலக சம்பியனான இங்கிலாந்து வலுவான அணிகளில் ஒன்றாக திகழ்கிறது. உள்நாட்டுச் சூழலில் விளையாடுவது அவர்களுக்கு சாதகமாக இருக்கும்.

இவ்விரு அணிகளும் இதுவரை 69 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் மோதியுள்ளன. அவற்றில் 37 இல் இங்கிலாந்தும் 30 இல் இந்தியாவும் வெற்றி பெற்றுள்ளன. 2 போட்டிகள் முடிவுகளின்றி நிறைவுபெற்றிருந்தன.




திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.
அருந்ததி
இணைய திருமண சேவை
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
www.arunthathee.com | +94 777 164 524

# மரண அறிவித்தல்



மலர்வு 20 - 02 - 1988

உதிர்வு 26 - 06 - 2021

## கிருபாமூர்த்தி சிந்துஜன்

(சிவன் ஸ்டோர்)

K.K.S. வீதி இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மலேசியா, இணுவிலை வாழ்விடமாகவும் கொண்ட கிருபாமூர்த்தி சிந்துஜன் (26.06.2021) நேற்று சனிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் கிருபா மூர்த்தி – பிரபாவதியின் அன்பு மகனும், கீர்த்திகாவின் (ஆசிரியை – யா/பளை மத்திய கல்லூரி) அன்பு அண்ணாவும், கபிதாஸின் (Elephant House) அன்பு மைத்துணரும் சஸ்விகாவின் அன்பு மாமாவும், காலஞ்சென்றவர்களான அம்பலவானர் – மகேஸ்வரி, நடராசா – நாகம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் தயாபரன் – சந்திரவதனா, மகேஸ்வரன் – கல்யாணி ஆகியோரின் அன்பு மருமகனும், ரவீந்திரன் – வனஜாவின் அன்புப் பெறாமகனும், அருண் பிரசாத், சோபிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சேந்தன், சௌசிகன், மாதுளன், துவாரகன், மாதங்கி ஆகியோரின் அன்பு மச்சானும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, வீரசிங்கம், ஆறுமுகம் சரஸ்வதி, சிவபாதம், சண்முகநாதன், ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, ஞானேஸ்வரன், சின்னம்மா, நாகரத்தினம், தில்லைநாயகி மற்றும் சுந்தரேஸ்வரி, திருச்செல்வம், தில்லையம்பலம் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆறு.திருமுருகனின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:அ.கிருபா மூர்த்தி 'அக்கா அகம்'**
**K.K.S வீதி, இணுவில் மேற்கு. 0776912246**

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தமை! யாழ். மறைமாவட்ட ஆயர் அரசுக்குப் பாராட்டுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை, அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற உரை தொடர்பில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் பேசியுள்ள அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

தமிழ் கைதிகளை விடுவிப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை பாராட்டுகிறேன் என யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மற்ற தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மொத்தத்தில் 81 தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். 81 பேரில், பதினாறு பேர் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். கைதிகளின் விடுதலையும், அரசியல் கைதிகளை விடுவிப்பதில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் அக்கறையும் பாராட்டத்தக்கது,

நாடாளுமன்றத்தில் அமைச்சர் நாமலின் உரையும், அரசியல் கைதிகளின் விடுதலையும் வடக்கு மற்றும் தெற்கிற்கு இடையிலான நல்லிணக்கத்தை வலுப்படுத்த உதவும் என்று நாங்கள் நம்புகிறோம். - எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பதினாறு கைதிகளின் விடுதலையால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துளோம் எனவும், இந்த முயற்சி நிச்சயமாக அமைதி குறித்த நேர்மறையான கண்ணோட்டத்தைக் கொண்டுவரும் என்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்த வகையான முயற்சி நீண்ட காலத்துக்கு முன்பே எடுத்திருக்க வேண்டும். எவ்வாறாயினும், வடக்குக்கும் தெற்கிற்கும் இடையிலான தவறான புரிதல்களை இல்லாம் செய்வதற்கான ஒரு நல்ல முயற்சியாக நாங்கள் இதைக் கருதுகிறோம், - என்று பேராசிரியர் கூறினார்.

இதனிடையே, கைதிகளின் குடும்பங்கள், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்த கருத்தினை வரவேற்ற அதே வேளையில், கைதிகளை விடுவித்ததற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

மேலும் ஏனைய அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்தவும் அவர்கள் அரசாங்கத்துக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.


## பாவனைக்குதவாத இறைச்சி வவுனியாவில் கைப்பற்றப்பட்டது

வவுனியா - ஈரப்பெரியகுளம் பகுதியில் பாவனைக்கு உதவாத 200 கிலோகிராம் கோழி இறைச்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வட பகுதியில் விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட குறித்த இறைச்சியை ஏற்றிய வாகனத்தை வவுனியா தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது வாகனத்தில் போதியளவு குளிரூட்டி இன்மையால் இறைச்சி பழுதடைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து அவற்றைக் கைப்பற்றியுள்ளதுடன், குறித்த வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து கைப்பற்றப்பட்ட கோழி இறைச்சி மற்றும் வாகனம் என்பவற்றை நீதிமன்றத்தில்



ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இதேவேளை போகஸ்வெள பகுதியில் சுகாதார விதிமுறைகளை மீறி உணவுப்பொருள்களை விற்பனை செய்த வர்த்தகரொருவரிடம் பொருள்களைக் கைப்பற்றியுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## வவுனியாவில் நிறுத்தி வைக்கப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்கள் திருட்டு

வவுனியா நகர்ப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் இந்த விடயம் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றின் காவலாளியின் மோட்டார் சைக்கிள் கடந்த வெள்ளிக்கிழமை திருடப்பட்டுள்ளது. அதேபோன்று வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள வியாபார நிலையத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழ். மாதகலில் ஆட்லறி மீட்பு



யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் வெடிக்காத நிலையில் ஆட்லறிக் குண்டொன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வீதி திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த நேரம் அருகில் நிலத்தை தோண்ட முற்பட்ட போது குண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனாத் தடுப்பு நடவடிக்கை மலையக பகுதிகளில் மந்த கதியில்

### தொழிலாளர் தேசிய சங்கம் குற்றச்சாட்டு

மலையகத்தில் மந்த கதியிலேயே கொரோனாத் தடுப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளர் சோ.ஸ்ரீதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சோ. ஸ்ரீதரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மலையகத்தில் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் குறைவடைந்துள்ளன.

அதாவது, உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக முன்னெடுக்கப்படும் கிரு நாசினி தெளிக்கும் நடவடிக்கை, பெருந்தோட்டப் பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதில்லை.

எனவே கொரோனாத் தடுப்பு பணிகளை, பெருந்தோட்ட பகுதிகளிலும் அரசாங்கம் விரைவாக முன்னெடுப்பது மிகவும் அவசியமாகும்.

இதேவேளை நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா சடலங்களை அடக்கம் அல்லது தகனம் செய்வதற்கு மக்கள் பெருமளவு நிதியை செலவிடும் நிலையும் உள்ளது.

இதற்கும் உரிய நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

INDIVIDUAL ENGLISH CLASSES
K.GANESH (BA. Pera)
Grade - 7 தொடக்கம்
பட்டதாரிகள்,
தொழில் புரிவோர்,
English Medium Courses
செய்பவர்களுக்கு,
Fluent Spoken.

077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

மணமகள் தேவை
வயது 43, இந்து கோவியர், கிளிநொச்சி, பிள்ளைகள் இல்லாத விவாகரத்தான அரச சேவையில் உள்ளவருக்கு மணமகள் தேவை. பிள்ளைகள் இல்லாத விதவைகள், விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்.
076 549 8931

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2021இல் வெளியிடப்பெற்றது.